## மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 324/2025 | வா.சா. | 1 |
| பெயர் | திரு. விஷால் | | |
| த/பெ. | திரு. திலீப்சேட் | | |
| கிராமம் | : | சாதி | |
| தாலுக்கா | : | சமயம் | |
| வயது | : 30 | தொழில் | |

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். 30-10-2022 தேதியிட்ட பிராமிசரி நோட் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 19-04-2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், அஞ்சலக அத்தாட்சி வா.சா.ஆ.3 ஆகவும், எனது ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.